27

இராஜா S. S. ஷண்முகதாஸ் அவர்களியற்றிய

சந்தவசனலங்கார பக்திரஸ

# செந்தமிழ்க்கதம்பம்

முதற் பாகம்



காப்பி ரைட்

விலை அணா 2

ஷ்ண பிள்ளை,

சி. பிரதர்ஸ்., மதுரை.

NR24
N31
125462

உ

குகமயம். மிகநயம்.

தமிழ் நாடகாசிரியச் சக்ரவர்த்தி, ஸ்ரீ ல ஸ்ரீ

**T. T. சங்கரதாஸ் சுவாமி,**

அவர்களின் மாணவரான

மதுரை செந்தமிழ் வித்துவான்

சந்தச் சரபம் இராஜா

**S. S. ஷண்முக தாஸ் அவர்களால்,**

இயற்றிய

சந்த வசனலங்கார பக்திரஸ

# செந்தமிழ்க் கதம்பம்.

முதற்பாகம்.

**மு. கிருஷ்ண பிள்ளை,**

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

மதுரை.

மதுரை விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

காப்பிரைட்] 1931 [விலை அணா 2

175462

தமிழ் நாடகாசிரியச் சக்கரவர்த்தி,
ஸ்ரீ ல ஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமி அவர்களால்
தரப்பெற்ற

## சாற்று செய்யுள்.

திருவருளி நிறைபரிபூ ரணகிருபை பெருகிவளர்
　　தீக்ஷண்ய மானசுமு கன்
திக்குவிஜ யத்திலெதிர் நிற்பவர்ம னக்குருளே
　　சேதித்து வெற்றியுடை யான்
குருமகிமை யுளஜெனக குலதிலக மெனுநயக்
　　கோதற்ற நீதமுறை யான்
கொத்தலர்ம ணித்தொடையில் ரத்தினம ணித்தரள
　　கோவையணி மார்பினழ கன்
ஒருநொடியி லமரரருள் மழைபொழிய வமுதகவி
　　யுரைக்கும் சமத்கார னும்
ஓதுசந் தச்சரப கன்னிச் சமீனென்னும்
　　வடுமலைக் கவிராய னும்
தருவணைய கருதிலகு புகழிலகு கவிவலன்
　　சங்கரன் யானுமன் பால்
சங்கீத சாகித்திய னென்றே யழைக்கு நம்
　　ஷண்முக தாசமா லே

2127

இங்ஙனம்.

784.0954

தா. தா. சங்கரதாஸ்
நாடகாசிரியன்.

உ
குகமயம்.

# பக்திரஸ செந்தமிழ்க் கதம்பம்.

காப்பு.

வெண்பா.

சந்தாரச் சீர்வசன சாகித்யச் செந்தமிழ் சொற்
சிந்தாரப் பக்திரசத் தேனமுதைத்—தந்தாளும்
ஆதிகண நாதனிரு
பாதமதி னீதமதை
யாதரவேன் றேதவரு
ளாம்.

சோகசுகா மிருதங்க தாளமும் என்ற யெடுப்பு.
பின் சந்த மாறுதல்.

பஜனைக் கருள் செய் பால கணபதி
பாஸாங் குஸ நிதி பக்தர்கள் ப
பரமக் கிருபா நிதியின்
பாலா ஞாலாநு கூலா
பகவனே மூலப் பொருளே ப
பக்தர்கள் நத்திடு கர்த்தனே
அத்தனே சுத்தனே
சித்தனே நித்தந் துதிசெய் ப

பாமர ஜெனனத் தைநீக்க
தாமத மில்லாது துதிசெய்
பாலர்க் கருள்புரிய வொணுதா
கண நாதா
இனும் வாதா
யேதும் சூதா
வல்லபை நாதா ப

பஞ்சக் கரனே பரனே
பார்வதி மகனே சுகனே
பக்ஷமெந்த நாளும் நிற்க பார்
கருணைபார் தருணம்பார் சற்றுபார்
ஷண்முகன் ப

---

2. ஓ பால ஷண்முகா என்ற யெடுப்பு, பின் மாறுதல்.

பல்லவி.

ஸ்ரீ வேத பாரதி செய்யருள் ததி
நீகெதி ஸ்ரீ

தினந் தினமுனே நினைந் திடர்க்கருள் ஸ்ரீ
செப்பும் வெண்பா விருத்த
மொப்பும் சொற் பொரு ளருள்
பொற்பத ஸ்ரீ
சீரசை யெதுகை மோனைப்
பேரசையா வாரருளிட
சிறிது நினது மனது மகிழுறு ஸ்ரீ

சித்திக்கும் யென்மொழி
பத்திக்கும் நல்வழி
சித்திக்கும் வகையருள் ஸ்ரீ

அநுபல்லவி.

மாகீத போதராஹித மதியே
யெனக் கருளும் துதியே
மறை நிதியே ஸ்ரீ

சரணம்.

திருமறைவே தனின்பாரி ஜெகமெச்சிய சுகவாரி
கிருபைக்கண்பா ருமொய்யாரி கீதாமிர்த சுகவாரி
சிந்துசங் தச்சரப
செந்தமிழ்ச் சண் முகன்றுதி ஸ்ரீ

---

3. தயஜூசுட கதிவே—என்ற மெட்டு, ஆதி தாளம்.

பயமே தினி நமக்கு முரஹரி
பஜனு மிர்தப்பண் நமக்கிருக்க வெம ப

கயமா னதர்க் கருளே செய்த
கால கோலன் ஸ்ரீகோ
பால சீல லோல னெதிருற ப

தயவே கொண்டு தான் வரு பவன்
சந்தமா சரபசங் கீத ஷண்முகன்
சுயமாய்ப் புகழ் துதி யேற் பவன்
தூய காய நற்ச
காய மாய னேய னெதிருற ப

4. தயவிலாததேன வஞ்சம்-என்ற மெட்டு தாளம் ஆதி.

பல்லவி.

அம்மா—மதுரை ராணி மீனாக்ஷி நின்
மன திரங்கி காக்ஷி
கடாக்ஷி ம

அநுபல்லவி.

அதிமது ரத்து தியின் மதியே என்றும்
ஆண்டருள் எனை வேண்டினே னுனை
அற்புத நட்புயர் சற்குண ம

சரணம்.

சோம சுந்தரனின் வாம பாகத்தமர்
சுகிர்த ஞானபாரி யன்ப ருளத்
தோங்கு கானவீரி சகலகலைத்
தோத்தரிக் குதாரி பொற்
றாமரை தனினின் றுடு மொய் யாரி
சரபச்சண் முகனின்
பிரபல்யச்சொல் வாரி
தம்பதம் நம்பினே னம்பிகா ம

எந்துகேளக லிந்துராநீ—என்றமெட்டு தாளம் ஆதி.

பல்லவி.

5. செந்திற் குடியோய் சேவற் கொடியோய்
சிந்திக்கு மைந்தனேன் முந்திவந் தருள்செய் செ

அநுபல்லவி.

கந்த வேலா சந்த லோலா
அந்தரி பாலா சுந்தர சீலா செ

சரணம்.

ஆறு முகனே யமரனே தேவா
ஆதரி யெனே யன்பனே வா வா

வேறுதுணை நேர் விளங்க வுளதோ
வேண்டு ஷண்முகன்சொல் விதரண செ

---

சந்தப்பெருக்கு—தாளம் ரூபகம்.
ராம நாமமே தெய்வீகம்—என்ற மெட்டு.

பல்லவி.

சோம வாரனே கார்த்திகா
சுப்ர மண்யனே திருப்பரங் கிரியுறை சோ

சுகசித மாகவென் னுளும்
விகசித மாக வந் தாளும் சோ

தோகை விரித் தாடிய மயில்
வாகனமதில் நடமிடுகடவுளே சோ

சொற்பதா வெனக் கருள்புரி
பொற்பதா மலைமுனிதொழு
மற்புதா வருணகிரிசொற்
கற்பிதா வுமையருள் சுதா சோ

துலங்கு தாளமணிவடம
திலங்கு திருவரு ளறுமுக
வலங்கி ருதப் பொருளெனும் சோபிதனே சோ

தொந்திக் கிளையவனே கடற்கரை
செந்திக் குருபரனே வயனைச் சிறை
முந்திச் செய்தவனே சந்தச் சரப
சிந்துக் கிசைந்தவனே ஷண்முகனே சோ

தூயவி தாயகன் னேயச
காயவு பாயநீ யேயருள் சோ

அநுபல்லவி.

சாம வேத மோதி ராவணன்

றனக்கருளிய சிவன்குமரா
வெனக் கருளிடு மரோ கரா சோ

சரணம்.

காவடி கோடான கோடியைக்கூடி
கண்டு களிப்பவ னேவிளையாடி
பாவடிக்குமடி யார்தமைநாடி
பாரோர்க்கருள்புரி
சரஹண பவா னந்தனே
வேறோர் துணையிலே
வேண்டினேன் கந்தனே சோ

7. இராகம்—கரகரப்பிரியா—தாளம் ஆதி.

பின் வசன சந்த முடுகு.

தான தந்தனா—தனன தன
தான தந்தனா—என்ற சந்த மெட்டு.

ஸ்ரீ-பாலதெண்டபாணி துதிபுரியும்
பக்த ரன்பைப் பூணி பழனிமலே பா

தினம்—பால் காவடி கொண் டரகர
வேல்மயில் வேல்மயி லெனவரு பா

நற் பாவை வள்ளியின்
மாவனத்திலே
யேவ லானையாய்க்
கூவி னோர்க் கிளைய பா

சிவ பரப்பிர்ம வேலா சடாக்ஷர
பக்தி மந்தர மூலா பிரணவப்
பண்பு கொண்ட சீலா சரஹண
பரமனுன மேலா வுன திரு
பதாம் புயத் திதானந்த
நிதானத்தைச் சதா நம்பி
பார்த்திடப் பூர்த்தியாங் கீர்த்திமா நேர்த்திசேர் பா
காணும்—பண்டு தொண்டர் கண்டு கொண்ட பா
மெய்ப்—பங்கமிலா சிவஞான
லெங்கோடுக் கௌபீன பா
பந்தப் பிரபச் செந்தமிழ்
சந்தச் சரபச் சண்முக பா

---

இராகம்-பியாக்—தாளம்-ஆதி.

பின் அடுக்கு சந்தம்.

தான தந்தான தந்தத்—தன
தானன னைன தானன னைன
தான தந்தான தந்தத்—என்ற மெட்டு.

காவடிக்காரன் கந்தன்

கழு—காசலமாநக ஈசுரனுகிய கா
சொற்—கற்பித்த குருவைச்சிறை
வைப்பித்த ப்ரணவக்குரு கா
நற்—கார்த்திகேயன் முருகன்
கீர்த்தி மாதவன் மருகன் கா

இரு—கரங்குவித் தரோகரா
அரோகரா வெனவருதிரு கா

மாங்—கனிக்காகமலை முழுவதும் வலம்
பினிக்காதுமயின் மிசைவந்ததிரு கா

திரு—கந்தப்பன் கவிவலர்தொடு
சந்தப்பன் கருணைசொற்கு
கந்தப்பன் கதிதரநேர்
முந்தப்பன் யென்னப்பன் கா

நருங்—காதல தாகவி பூதல மீதினி
லேதுதி யோதிடு சாதுஜ ஞர்த்தனன் கா

பாவடிவாகிய போதன் பக்திகொண்டாடிடுநீதன்
சேவடி யருட்பிரசாதன்
செந்தமிழ் ஷண்முகனுரையெனும்
சிந்துபுகழ்க் கழுகுமலைக் கா

---

இராகம் - கானடா - தாளம் - சாப்பு.

9. தன தானத் தா ஞன
தானுன தா ஞ ஞ
என்ற சந்த வசன மெட்டு.

திருவாவினங்குடி தேசிகா நீ வா வா வா
குருவாய்ப் பொதிகை முனிக்
குபதேசித்த ஷண்முகா
குமரக்குருபரமுருகக் குகனே யறுமுகனே
சிவன்மகனே சரஹணபவனே வா வா தி

தொகையரா.

வருவா யெனக்கருள வடிவேல் கரங்கொண்டு
வாலைமகனே ஷண்முகா
வளர்திருப்புகழருண கிரிசந்தபக்திக்கு
வந்தருளி யப்பண்சுகா

பாட்டு.

இத்தருணம் தான் தவறில்
யெத்தருண முன்சேவையோ
இதுநிதியோ மதியோயிது
சம்மதியோ யிதுததிதுதி
எனது மனதுக் குனது திருவருள்புரி தி

---

10. இராகம் - தோடி - தாளம் - ஆதி.

பின் மகுடத்துடன் ஜதி சொல்.

தா தனன தன ணு தனன தன—
தா தனன தன ணு என்ற மெட்டு.

மாம்பழுனிமலை பூம்பதக்குருவை
நாம் பழகில் நலனே
நலனே பலனே புலனே மா

மயிலாடிடக் குயில் பாடிட
அயில் வேலவ ஞெயிலாயு லவிடு மா

சாம்பசிவ குமரன் சரஹணபவ சிவசடாக்ஷரன்
சராசரத்துநி ராமயத்து
பராபரிக்கும ராவெனப் புகழ்

1754

சந்தப்பன் அருணகிரிச்
சொந்தப்பன் சரவணையில்
வந்தப்பன் காவடி
கந்தப்பன் எனதப்பன் வாழ் மா

தாம் தாம் தனன தீம் தீம்
தக தரி கிட தோம் தோம் தகனகுதகு
ஜேம் ஜேம்
தத்தித்தா தளாங்கு தக
தித்தித்தா தகதிமிதிமி
தத்தித்தா திதித்தா
வென வொலியுற
குதித்தே துதித்திட
மயிலேறித்
ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம் மென
தாண்டவமிடுபா லதெண்டபாணி
சரபச்சண்முகனின் பிரபல்யத்தமிழைப்பூணி மா

---

## 11. இராகம் - தேசிகம் - தாளம் - ஆதி.

தனதா நந்தன தான தந்தன
தனன தந்தனை தனனா—என்ற மெட்டு.

கைலாயப் பொடவுச் சுருளிமலே
கந்தவேல் மகிமையே மகிமைக் கை

காணக் காண கொண்டாட்டம்
காவடி கூட்ட மெதேதட்டம் கை

காண் போ மிதுததி நமதொரு
ஆண் பெண் ணெல்லோரும் வாருங்கள் கை

கற்குகை விருக்ஷ மதின்கீழ்
சற்குரு தேசிகன் வாழிடம் கை

கலிகால மீதடியவர்க்குச்
சலியாது வரமருள் புரியும்
கருணாகர மாமயூரன்
திருநாளைக் காண வேண்டி
கந்தவேல் கந்தவேல் கந்தவேல்
என்று துதி கை

கம்பரோடுபல சம்பிரதாயமுள
உம்பர்கள்புகழும் தம்பிரான் வசிக்கும்
கற்குகை ரகஸ் யார்த்தம்
அதிலே தீர்த்தம்
வருமெ தார்த்தம்
விதிப்பி ராப்தம்
உண்டெனில் கிட்டும் கை

கால் நடையாய்ச் சென்று வெகு கோடி
வேல் மயிலா வென்று அத்வீத
நூல் நடையா யின்று அங்கு வளர்
சேல் சுனையில் நின்று கரங்குவித்து
கண்டு தரிசித்துக்
கொண்டுப்பிர சாதத்தை
யுண்டு மதியொடு
தொண்டு புரிந்திடு கை

மயிலாடுஞ் சோலை மாகதலிபலா
மணக்கும் பலவாறு மகிழ் பெருங்கலா
குயில் பாட வண்டு கூவும் குறைவிலா
குமரன்ஜாகையைக் கோறிக்கா வலா

குகாமு ருகாஷண்
முகாவென் றுவெகு
அகார ரிகார
சுகார மியங் தரு ஹை

12. இராகம் சங்கராபரணம்-தாளம்-ஆதி

தன்ன னன்ன தனன—தன
தன தன தன தன
தான தனன னனன
தன்ன னன்ன
என்ற மெட்டு. மாறுதல் சந்தம்.

அரோகரா பழனி புரி
வாழ் தெண்டபாணி முருகனுக் கு

பரோபகாரன் பக்தரக்ஷகன்
பண்புகழ்க்ஷுகன் பாலஷண்முகன்
பழனிமலைக் கடவுள் பரமகிரு
பாநிதி யானபொருள்
பகரருட் கு

அரஹர வெனுஞ்சத்தம் மலையடி
வாரமெங்கும் நித்தம் முழங்கியே
பரபரப் பொடுசித்தம் துதித்தெழு
பக்தகோடிதத்தம் கொண்டாடும்
அன்னக் காவடி கோடி அரவக் காவடி கோடி
அமுதக் காவடி கோடி அருட் காவடி கோடி தொழும்

அங்கிங் கெங்குஞ் சங்குமு
மூங்கின் பங் கொள தங்கிடு
மன் பரகப் பிரயாணி
யதிமதுரத் துதி பூணி
இன்புற்றிடு மருட்டோணி
இணை பிரியாத் தெண்டபாணிக் க

அடியவர்க் கொருமய மாய்விளங்கிடு
படிமிசை மாமயில் மீது துலங்கிடு
ஆண்டி மொட்டை யாண்டி கோவ
ணாண்டி பழனி யாண்டி வேலுக் க

அண்ட மெண் டிசைய டங்கலும் போற்ற
பண்டு தொண்டர் முனங் கண்டு கொண்டதிரு
மண்ட லாதிபதி

அருணகிரிச் சந்தன் அண்ணாமலை
ரெட்டி போற்றுங் கந்தன் சடாக்ஷர
கருணை யுற்ற சொந்தன் சந்தச் சரப
கவி ஷண்முக பந்தன் சிந்துறை
கடமிசை யடமொடு
படரிட ரதுபொடி
படநட மிடுமொரு
சுடர்வடி வேலடிக் க

---

## 13. இராகம் பியாக் தாளம் ஏகம்.

தந்தானத் தான ஞன
தான ஞனத் தன ஞை
என்ற சுருள் மகுட சந்தம்.

பல்லவி.

கந்தா குகா முருகா
கார்த்தி காசு காஷண்முகா கந்

அநுபல்லவி.

சிந்தூர வாரா சிவகுமரா
செந்திக் கடலோரா
செய்யருளைப் பொய்யிருளை
மெய்யெனவே நொய்யுறேனுன்
றுணைபுரி தேவா காவா வாவா க

திகையரா.

தேனுபிஷேகனே காவடிக் காரனே
திருப்புகழ்ப் பிரியப் பிரபுவே
சிவசுப்ரமண்யனே சிவகுரு பீடமே
சித்துக் கலியுக வரதனே
திருமறை வேதனைச் சிறைவைத்த கடவுளே
தெண்டபாணித் தெய்வமே
சிவஞான தீபமே யறுமுகச் செல்வமே
தேவ சேனாதி பதியே.

சரணசந்தம்.

ஜெகத்குருவே சடாக்ஷர திருவே யுருவே கருவே
சித்தி யளித்திடு முத்தமனே
பக்தர்கள் முத்தர்கள்
நத்திது தித்திடு வித்தகனே
மெத்தவு முத்திடு
சத்திப ரத்தியின் புத்திரனே
சிந்தித்தேன் வந்தித்தேன்
தொந்திக் கிளைய
தேவா காவா வா வா சொற்
செந்தழ் சந்தச் சண்முகன்
சிந்துபு கழ்ந்திடு கழுகுமலைக் க

முதற்பாகம் முற்றுப்பெற்றது.

## புதிதாக வெளிவந்திருக்கும் பக்திரஸக்கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமிக்கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வ ரஞ்சிதமெனும் பக்திரசக்கீர்த்தனம் முதற்பாகம் .... ... 0—5—0

ஷை இரண்டாம் பாகம் ... 0—5—0

ரெட்டிநகர் வித்வான் இராமசாமிக்கவிராயர் அவர்களியற்றிய பக்திரசக்கீதாமிர்தம் 0—4—0

நாடகாசிரிய சக்ரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய ஒன்பது நாடகச் சரித்திரங்கள் சேர்ந்த ஒரு புஸ்தகம் 3—0—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரச சண்முகனார் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக் கீர்த்தனம் .... .... 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V. சக்திவேலாச்சாரி அவர்கள் இயற்றிய குமரக்கடவுள் பஜனாமிர்தம் புதிதாக வெளிவந்தது .... 0—5—0

ஷையாரியற்றிய வேணுகானம் என்ற நூதன பக்திரசக் கீர்த்தனம் .... 0—5—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாட்சியாபிள்ளை அவர்கள் இயற்றிய விநோதபரமானந்தக் கீர்த்தனம் ... 0—5—0

ஷை யாரியற்றிய இந்து தேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் .... .... 0—5—0

☞ மு. கிருஷ்ணபிள்ளை,

பி. கா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,

புக்ஷாப், மதுரை.